ஸ்ரீ ஹரி:

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 2 | ஜூலை 1997 | கானம் : 12

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 2 ஜூலை 1997 கானம் : 12

## விஷய ஸூசிகை

பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர் - 20 | 4 |
| 3. | குந்தி ஸ்துதி: | 5 |
| 4. | ஸ்ரீ ஆண்டாள் வைபவம் | 10 |
| 5. | நக்ஷத்திரங்களின் பெருமைகளும் விளக்கங்களும் - 1 | 14 |
| 6. | பக்தர்கள் அவ்வப்பொழுது கேட்ட கேள்விகளுக்கு, ஸ்ரீ ஸ்வாமிகள் அளித்த பதில்கள் - தொடர்ச்சி | 16 |
| 7. | பாவ லோகத்தில் ஒரு ஸஞ்சாரம் | 18 |
| 8. | ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து - 23 | 22 |
| 9. | செய்திகள் | 29 |
| 10. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 32 |



ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம்

ராகம் : ரஞ்சனி தாளம் : ஆதி

*கோலோகம் சென்று வந்தேன் - நான்*
*கோகுல பாலனை நேரில் காண (கோலோகம்)*

*கோபியர் நடுவே மணி மண்டபம் கண்டேன்*
*அச்சுதன் சரணத்தை அடையவே அழுது நின்றேன் (கோலோகம்)*

*கதவும் திறந்தது, கண்ணனும் வந்தான்*
*கட்டியணைத்து காதில் சேதியும் சொன்னான்*
*சத்தியமாக கைவிடேன் என்றான்*
*சத்குருநாதனும் தானே என்றான் (கோலோகம்)*

**அறிவிப்பு** : 'மதுரமுரளி', ஜூன் '97 இதழுடன் இரண்டு வருஷம் பூர்த்தியாகி விட்டது. சந்தாதாரர்கள் மூன்றாம் வருஷத்திற்கான சந்தாவை புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வருஷ சந்தாவிற்கான டிமாண்டு டிராப்டை 'குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்' என்ற பெயரில் வாங்கி, உறை மீது

மதுரமுரளி,
V. சங்கரன்,
5/3, MIG Flats,
பி.டி. ராஜன் ரோடு, கே.கே. நகர்,
சென்னை - 600 078.
தொலை பேசி எண் : 4840527

என்ற விலாசத்திற்கு அனுப்பவும். மணியார்டர் மூலமும் அனுப்பலாம்.

கும்பகோணத்தில், அம்மாளு அம்மாள் என்னும் கிருஷ்ண பக்தை இருந்து வருகிறார். இளம் வயதிலேயே வைதவ்யத்தை அடைந்துவிட்ட இவர்கள், தன்னுடைய வாழ் நாள் முழுவதையும் ஸ்ரீ க்ருஷ்ண ஸேவையிலேயே அர்ப்பணித்து விட்டார்கள். இதுவரை, சுமார் 10,000 கீர்த்தனங்கள் இயற்றியுள்ளார். நம்முடைய கும்பகோணம் ஸங்கத்தைச் சார்ந்த ஹரி அவர்கள், அம்மாளு அம்மாள் க்ருஹத்திற்கு அருகில் வஸிப்பதால், அவர் வீட்டிற்கு அடிக்கடிச் சென்று, அங்கு நடக்கும் வைபவத்தில் கலந்து கொள்வது வழக்கம்.

ஒரு சமயம், சிரஞ்சீவி ஹரியின் பத்தினிக்கு ஒரு ஸ்வப்னம் ஏற்பட்டது. அந்த ஸ்வப்னத்தில், அம்மாளு அம்மாள் வீட்டில் உபாஸித்து வரும் க்ருஷ்ணன் தோன்றி, 'நான் உங்கள் வீட்டிற்கு வர விரும்புகிறேன்' என்று மீண்டும் மீண்டும் சொல்லி, தனக்குப் பசியாக இருப்பதாகவும் கூறினான். மேற்படி ஸ்வப்னத்தினை, சிரஞ்சீவி ஹரி அந்த க்ருஷ்ண பக்தையிடம் தெரிவிக்க, அவர்களும், இந்த வருட உத்ஸவத்தின் போஜன செலவை ஸ்ரீ ஹரியை ஏற்றுக் கொள்ள நியமித்தார்கள். உத்ஸவம் முடிந்து துளஸிப் பிரஸாதம் அனுக்ரஹித்துக் கொடுக்கும் பொழுது, அவர்களையும் அறியாமல், தவழும் சின்ன க்ருஷ்ண விக்ரஹம் துளஸிப் பிரஸாதத்துடன் ஹரியின் கையில் வந்து விழுந்தது.

பக்தையும், 'க்ருஷ்ணன் உன்னுடன்தான் வர விருப்பப்படுகிறான். அதனால் அழைத்துச் செல்லவும்' என்று கூறினார்கள். ஸமீபத்தில், கும்பகோணத்தில் நடந்த ஸ்ரீ மஹா பெரியவாளின் ஜயந்தி வைபவத்தின் பொழுது, நம் ஸ்வாமிகள், ஸ்ரீ ஹரியின் க்ருஹத்தில் தங்கி, ஸ்நான ஸந்த்யாவந்தன அனுஷ்டானங்களைச் செய்து, ஆகாரமும் எடுத்துக் கொண்டது, ஸ்ரீ ஹரியின் பத்தினி கண்ட ஸ்வப்னம் பலித்து விட்டதாகவே எனக்குத் தோன்றியது.

(தொடரும்)

- ஜயந்தி ஜானகிராமன்

# குந்தி ஸ்துதி :

*மன்யே த்வாம்காலமீசானம் அநாதிநிதனம் விபும் ।*
*ஸமம் சரந்தம் ஸர்வத்ர பூதானாம் யன்மித: கலி: ॥* 11

ஹே க்ருஷ்ணா! தங்களை, எல்லாவற்றையும் நியமிப்பவராகவும், ஆதி மற்றும் முடிவில்லாதவராகவும், எங்கும் வ்யாபித்திருப்பவராகவும், எல்லாவிடத்திலும் ஸமமாக ஸஞ்சரிக்கும்படியானவராகவும் நினைக்கிறேன். நிமித்த பூதரான உம்மிடமிருந்து ப்ராணிகளுக்குள் பரஸ்பரம் சண்டை ஏற்படுகிறதே ஒழிய, தங்களிடத்தில் எந்த பக்ஷபாதமும் கிடையாது.

*நவேத கஶ்சிந் பகவன் சிகீர்ஷிதம்*
*தவேஹமாநஸ்ய ந்ருணாம் விடம்பனம்:*
*ந யஸ்ய கஶ்சித் தயிதோஸ்தி கர்ஹிசித்*
*த்வேஷ்யஶ்ச யஸ்மின் விஷமாமதிர் ந்ருணாம் ॥* 12

ஹே பகவன்! உனக்கு வேண்டியவன் எனவும், வேண்டாதவன் எனவும் பாகுபாடு ஒரு பொழுதும் கிடையாது. அப்படியிருந்தும், உம்மிடத்தில் மனிதர்களுக்கு அனுக்ரஹிப்பவன், நிக்ரஹிப்பவன் என்ற விஷம புத்தியானது ஏற்படுகிறது. அதற்குக் காரணமான, மனிதர்களின் வேஷத்தை செய்கின்றவரான உம்முடைய ஸங்கல்பத்தை ஒருவனும் உள்ளபடி அறியமாட்டான்.

*ஜன்ம கர்ம ச விஶ்வாத்மந் அஜஸ்யாகர்து ராத்மந: ।*
*திர்யங் ந்ருஷிஷு யாத:ஸு ததத்யந்த விடம்பனம் ॥* 13

ஹே ஜகத்ரூபியே! பிறப்பே இல்லாதவனும் ஒரு காரியமும் செய்யாதவனும், ஆத்மாவுமான உமக்கு, ம்ருக ரூபமான (வராஹாதி அவதாரங்கள்) மனித ரூபமான (ராமக்ருஷ்ணாதி அவதாரங்கள்) இதர ஜல ஜந்து ரூபமான பிறப்புகள் எவை உண்டோ, அந்த பிறப்புகளில் உள்ள கர்மமும் யாதுண்டோ அவையெல்லாம் உம்முடைய நாடகமே. அவை உண்மையானதல்ல. உமக்கு பிறப்பு என்பது கிடையாது.



*கோப்யாததே த்வயி க்ருதாகஸிதாம தாவத்*
*யாதே தஶாஸ்ரு கலிலாஞ்ஜன ஸம்ப்ரமாக்ஷம் ।*
*வக்த்ரம் நிநீய பயபாவனயா ஸ்திதஸ்ய*
*ஸா மாம் விமோஹயதி பீரபியத் பிபேதி ॥* 14

ஹே க்ருஷ்ணா! உம்மைக் கண்டு பயமும் பயப்படுகிறது. அப்படிப்பட்ட நீர், கோகுலத்தில் நந்தகோபருடைய க்ருஹத்தில் தயிர்ச் சட்டியை உடைத்த பொழுது, யசோதை கயிற்றை எடுத்தவுடன், கண்ணீருடன், அதன் பெருக்கால் கலைந்த மையை உடையதும், இங்கும் அங்கும் அலைகின்றதுமான கண்களுடன், முகத்தை கீழே தொங்கவிட்டு, அடிப்பாளோ என்ற மிகுந்த பயத்துடன் நீ நின்ற நிலையானது என்னை மிகவும் மோஹிக்க வைக்கிறது.

*கேசித் ஆஹுரஜம் ஜாதம் புண்ய ஶ்லோகஸ்ய கீர்தயே ।*
*யதோ: ப்ரியஸ்யான்வவாயே மலயஸ்யேவ சந்தனம் ॥* 15

ஹே ப்ரபோ! உம்முடைய பிறப்பை பல விதமாக பெரியோர் சொல்கின்றனர். சந்தன மரத்தால் மலய பர்வதம் பெருமை பெறுகிறது. அது போல், உமக்குப் பிரியமானவனும், புண்ணிய ஶ்லோகனுமான யதுவின் கீர்த்தி விளங்குவதற்காகப் பிறவியில்லாத நீர் யது வம்சத்தில் பிறந்ததாக சிலர் கூறுகின்றனர்.

*அபரே வஸுதேவஸ்ய தேவக்யாம் யாசிதோப்யகாத் ।*
*அஜஸ்த்வம் அஸ்ய க்ஷேமாய வதாய ச ஸுரத்விஷாம் ॥* 16

வேறு சிலரோ, நீர் இவ்வுலகத்தின் நன்மைக்காகவும், தேவர்களின் எதிரிகளை வதைப்பதற்காகவும் வஸுதேவரால் ப்ரார்த்திக்கப்பட்டு தேவகியிடம் அவதரித்ததாக கூறுகின்றனர்.

*பாராவதாரணாய அன்யே புவோ நாவ இவோததௌ ।*
*ஸீதந்த்யா பூரி பாரேண ஜாதோ ஹ்யாத்ம புவார்தித: ॥* 17

ஸமுத்திரத்தில் பாரம் மிகுதியால் தத்தளிக்கும் கப்பல் போல், பாபிகளால் பூமிக்கு ஏற்பட்ட பாரத்தைக் குறைப்பதற்காக ப்ரஹ்ம தேவரால் வேண்டப்பட்டு, நீர் அவதரித்ததாக வேறு சிலர் கூறுகின்றனர்.

*பவே஽ஸ்மின் க்லிஶ்யமாநாநாம் அவித்யா காம கர்மபி: ।*
*ஶ்ரவணஸ்மரணார்ஹாணி கரிஷ்யந்நிதி கேசன ॥* 18

அஜ்ஞானம், ஆசை, கர்மம் இவற்றால் இவ்வுலகில் துன்புறும் ஜீவர்களுக்குக் கேட்பதற்கும், நினைப்பதற்கும் இனியுவைகளான லீலைகளைப் புரியும் பொருட்டே நீர் அவதரித்ததாக சிலர் கூறுகின்றனர்.

*ஶ்ருண்வந்தி காயந்தி க்ருணந்த்யபீக்ஷ்ணஶ:*
*ஸ்மரந்தி நந்தந்தி தவேஹிதஞ்ஜனா: ।*
*த ஏவ பஶ்யந்த்யசிரேண தாவகம்*
*பவப்ரவாஹோபரமம் பதாம்புஜம் ॥* 19

ஹே க்ருஷ்ண! எவர்கள், உமது லீலைகளை இடைவிடாது கேட்டும், பாடியும், ஸ்மரித்தும், பேசியும், இன்புறுகிறார்களோ, அவர்களே விரைவில் ஸம்ஸார ப்ரவாகம் சாந்தியடையும் உமது பாத கமலங்களை தரிசிக்கின்றனர்.

*அப்யத்ய நஸ்த்வம் ஸ்வக்ருதேஹித ப்ரபோ*
*ஜிஹாஸஸி ஸ்வித் ஸுஹ்ருதோऽநுஜீவின: ।*
*யேஷாம் ந சான்யத்பவத: பதாம்புஜாத்*
*பராயணம் ராஜஸு யோஜிதாம்ஹஸாம் ॥* 20

ஹே ப்ரபோ! பக்தர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்பவரே! உம்முடைய துணைக்கொண்டு, எதிரி அரசர்களிடம் துக்கத்தை உண்டு பண்ணினவர்களான எங்களுக்கு, உம்முடைய சரணாரவிந்தத்தைக் காட்டிலும் வேறு எந்த புகலிடமும் கிடையாது. அத்தகைய மிகவும் ஸ்நேஹத்திற்கு பாத்திரமான, உங்களையே அண்டி வாழ்பவர்களான எங்களையும் கூட நீர் பிரிய விரும்புகிறீரா?

*கேவயம் நாம ரூபாப்யாம் யதுபி: ஸஹ பாண்டவா: ।*
*பவதோऽதர்ஶநம் யர்ஹி ஹ்ருஷீகாணாமிவே ஶிது: ॥* 21

இந்திரியங்களுடைய அதிபதியான ஜீவன் இல்லாத சரீரம் எப்படி எதற்கும் பயனற்றுப் போகிறதோ, அப்படியே நீர் இங்கு இல்லாமல் போனால், புகழினாலும், செல்வத்தாலும் யதுக்களுடைய பந்துக்கள் என்னும் பெயர் கொண்ட பாண்டவர்களான நாங்கள் எதற்கும் பயனற்றவர்களாவோம்.

*நேயம் ஶோபிஷ்யதே தத்ர யதேதானீம் கதாதர ।*
*த்வத்பதை ரங்கிதா பாதி ஸ்வலக்ஷண விலக்ஷிதை: ॥* 22

உமக்கே உரியதான ஶங்கம், சக்ரம் முதலிய விசேஷ லக்ஷணங்களையுடைய உம்முடைய திருவடிப் பதிப்புகளால் இந்த பூமியானது இப்பொழுது ப்ரகாஶிப்பதுபோல் நீர் துவாரகைக்குச் சென்றவுடன் சோபையுடன் திகழப்போவதில்லை.

*இமே ஜனபதா: ஸ்வ்ருத்தா: ஸுபக்வௌஷதிவீருத: ।*
*வனாத்ரி நத்யுதன் வந்தோ ஹ்யேதந்தே தவ வீக்ஷிதை: ॥* 23

இந்த தேசங்களும், நன்கு பழுத்த செடி கொடிகளும், வனம், மலை, நதி, ஸமுத்ரங்களும் உமது கடாக்ஷத்தினாலன்றோ நன்கு வளமுடையவைகளாக இருந்து கொண்டு மேன் மேலும் வ்ருத்தியை அடைகின்றன.

*அதவிஶ்வேஶ விஶ்வாத்மந் விஶ்வமூர்த்தே ஸ்வகேஷு மே ।*
*ஸ்னேஹ பாஶமிமம் சிந்தி த்ருடம் பாண்டுஷு வ்ருஷ்ணிஷு ॥* 24

உலக நாயகனாகவும், உலகத்தின் ஆத்மாவாகவும், உலக ரூபமாயுமுள்ளவனே! வ்ருஷ்ணி குலத்திலும் பாண்டு குலத்திலும், உறவினர்களிடத்திலும் எனக்கு உள்ள பாசம் என்னும் கயிற்றை அறுத்து விடும்.

*த்வயி மேऽனன்ய விஷயா மதிர்மதுபதேऽஸக்ருத் ।*
*ரதிம் உத்வஹதாதத்தா கங்கேவௌகமுதன்வதி ॥* 25

மது குலத்தலைவனே! கங்கை எப்படி நீர்ப்பெருக்கைக் கடலில் சேர்க்கிறதோ, அப்படி என்னுடைய புத்தியானது வேறு விஷயங்களில் நாட்டமில்லாததாய் இடையறாது அன்புப் பெருக்கை உம்மிடம் கொண்டு சேர்க்கட்டும்.

*ஸ்ரீ க்ருஷ்ண க்ருஷ்ண ஸக வருஷ்ணிருஷ பாவ*
*நித்ருக் ராஜன்ய வம்ஶ தஹனானபவர்கவீர்ய ।*
*கோவிந்த கோத்விஜ ஸுரார்த்தி ஹராவதார*
*யோகேஶ்வராகில குரோ பகவன் நமஸ்தே ॥* 26

ஸ்ரீ க்ருஷ்ணா! அர்ஜுன ஸகா! யாதவஶ்ரேஷ்டா! உலகை வஞ்சிக்கும் அரசகுலமாகிய மூங்கிற் புதருக்கு காட்டுத் தீப் போன்றவனே! குறைவற்ற வீரியமுள்ளவனே! கோவிந்தா! பசுக்களுக்கும், அந்தணர்களுக்கும், வானவர்களுக்கும் ஏற்பட்ட துன்பங்களைத் துடைக்க அவதரித்தவனே! யோகேஶ்வரா! சராசர குருவே! பகவானே உமக்கு நமஸ்காரம்.

# ஸ்ரீ ஆண்டாள் வைபவம்

- ஸ்ரீ பாலாஜி

சென்ற இதழில், பெரியாழ்வாரின் திவ்ய சரித்ரத்தை அனுபவித்தோம். இதர ஆழ்வார்களுக்கு இல்லாத பெருமையான ''பகவானுக்கே மாமனார்'' என்னும் ஸ்தானம் பெரியாழ்வார் ஒருவருக்கே உண்டு. இதில், இன்னும் விசேஷம் என்னவென்றால், பெரியாழ்வாருடைய பெண் பிள்ளையானவள், சாக்ஷாத் பிராட்டியார் என்பது. ஒரு சமயம், பகவானிடம் பூமி பிராட்டியார் பிரார்த்தனை செய்து பூலோகத்தில் பெரியாழ்வாருடைய பெண்ணாக அவதரித்தாள். அந்த அவதாரமே ஸ்ரீ ஆண்டாள் ஆகும். ஸ்ரீ ஆண்டாள், ஆழ்வார் கோஷ்டியில் இருந்தாலும், பிராட்டியின் அம்சமாக இருப்பதால் மிக விசேஷமாக கொண்டாடப் படுகிறாள்.

ஸ்ரீ ஆண்டாள் அவதரித்த காலம், கலி பிறந்து தொண்ணூற்று எட்டாவதான நள வருடத்தில், ஆடித் திங்களில், சுக்ல பக்ஷம், சதுர்த்தி, செவ்வாய்கிழமை, பூர நக்ஷத்ரம். பெரியாழ்வார், தனது துளஸி வனத்தில், செடிகளுக்குப் பாத்திக் கட்டிக் கொண்டிருக்கும் பொழுது, துளஸி செடி கீழே, ஸ்வர்ணம் போல் ஜொலிக்கும் ஒரு பெண் குழந்தையைக் கண்டார். குழந்தையில்லாத ஆழ்வார், இதை எம்பெருமானுடைய ஸங்கல்பம் என்று எண்ணி, குழந்தையை சந்தோஷமாக எடுத்துச் சென்று, பூமியிலிருந்து கிடைத்ததால் குழந்தைக்கு 'கோதா' என்னும் பெயர் சூட்டி வளர்க்கலானார்.

கோதையை, அங்ஙனம் சொந்த குழந்தையாகவே பாவித்து, பஞ்ச ஸம்ஸ்காரங்கள் முதலிய வைணவ கர்மாக்களை செய்து வைத்தார். பெரியாழ்வாருக்கு, ஸ்ரீ க்ருஷ்ணன், பாவ பக்தியில் குழந்தையாக இருந்தான். ஆனால், பிராட்டியாரோ, தான் அவதாரம் செய்து, பெரியாழ்வாரிடம் குழந்தையாகவே வளர்ந்து வரலானாள். பெரியாழ்வாரும், கோதைக்கு சிறு வயது முதலே ஸ்ரீ க்ருஷ்ண கதைகளைச் சொல்லி க்ருஷ்ண பக்தியை ஊட்டினார்.

கோதையும், மிகவும் சிரத்தையுடன், அதிகாலையிலேயே தன் தந்தை எழுந்திருக்கும் பொழுது கூடவே எழுந்து, ஸ்நானாதிகளை முடித்து, ஆழ்வார் அனுஷ்டானம் செய்யும் பொழுது, தான் கோலம் போடுவது போன்ற மங்களகரமான காரியங்களைச் செய்வாள்.

பின்பு, பெரியாழ்வார் புஷ்பம் பறிக்கச் செல்லும் பொழுது, தானும் உடன் சென்று பூப்பறிப்பாள். அப்போழுது பெரியாழ்வார், க்ருஷ்ணனுடைய பால லீலைகளைக் கூறுவார். அதைக் கேட்டு, கோதை மிகவும் ஆனந்தமடைந்து மீண்டும் மீண்டும் க்ருஷ்ணனுடைய கதைகளைச் சொல்லும்படி கேட்பாள். க்ருஷ்ணனுடைய கதையை கேட்கும்பொழுது கோதைக்கு மெய் சிலிர்ப்பது, கண்ணீர் மல்குவது போன்ற பாவ பக்தி லக்ஷணங்களைப் பார்த்து ஆழ்வார், மிகவும் ஆனந்தத்துடன் ஸ்ரீமத் பாகவதம் போன்ற புராண ரத்னங்களை மேலும் மேலும் கூறுவார்.

ஸ்ரீ கோதை, ஸ்ரீமத் பாகவதத்தில் வரும் லக்ஷ்மி கல்யாணம், ருக்மிணி கல்யாணம், ஸீதா கல்யாணம் போன்றவைகளைக் கேட்டு தானும், ஸ்ரீ க்ருஷ்ணனையே மணக்க வேண்டும் என்று ஆசை கொண்டாள். 'தான் ஒரு மானிடப் பெண். பகவானை ஸாக்ஷாத்தாக மணக்க முடியாது' என்றெல்லாம் அவள் எண்ணவேயில்லை.

''பத்துடை அடியவர்க்கெளியவன் பிறர்களுக்கரிய வித்தகன்'' என்ற நம்மாழ்வாரின் வார்த்தைப்படி பெரியாழ்வாரால் வளர்க்கப்பட்டதால், பக்தியினால் பகவானை நிஶ்சயம் மணாளனாக அடைய முடியும் என்று உறுதியாக நம்பினாள். அதனால், எப்பொழுதும் க்ருஷ்ணனுடன் தான் விளையாடுவதாகவும், க்ருஷ்ணனுடன் பேசுவதாகவும் பாவித்து பக்தி செய்து வந்தாள்.

கோதை, ஒரு சமயம் ஒரு கனவு கண்டாள். அதில் அவள், தன்னுடைய தோழிகளுடன் யமுனைக்கரையில் மணல்வீடு கட்டி விளையாடிக் கொண்டிருந்தாள். அந்த சமயம், க்ருஷ்ணன் இவர்களிடம் குறும்பு செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் இவர்களருகில் வந்தான். க்ருஷ்ணனைப் பார்த்ததும், கோதை மணல் வீட்டை க்ருஷ்ணனிடமிருந்து காப்பாற்ற, தோழிகளுடன் சுற்றி நின்றாள். ஆனால், க்ருஷ்ணன் அவர்களை ஏமாற்றி, சிற்றிலை அழித்து விட்டு ஓடினான். கோதையும், தோழிகளும் அவனைத் துரத்த, க்ருஷ்ணன் சற்று தூரத்தில் நின்று கொண்டு, இவர்களைப் பார்த்து புன்னகை பூத்தான். க்ருஷ்ணனைப் பிடிக்க வேண்டும் என்று வந்த கோதை அந்தப் புன்னகையிலேயே மயங்கி க்ருஷ்ணனைப் பார்த்து, 'சிற்றிலோடு எங்கள் சிந்தையும் சிதைக்கக் கடவையோ கோவிந்தா' என்று சொன்னாள்.

'ஹே க்ருஷ்ணா! நாங்கள் விளையாடிக் கொண்டிருந்த மணல் வீட்டைதான் உடைத்தாய். அது போனால் போகட்டும். ஆனால்,

உன்னைப் பிடிக்க வரும் எங்களுக்கு, உன்னிடம் கோபம் கொள்வதா அல்லது உன்னைப் பார்த்து பேசாமல் மயங்கி இருப்பதா என்று குழம்பிப் போகும் அளவிற்கு, எங்களுடைய சிந்தையை இப்படி ஒரு புன்னகை புரிந்து சிதைக்க வேண்டுமா?' என்று புலம்பி, கனவு காணும் பொழுதே க்ருஷ்ணா! க்ருஷ்ணா! என்று பிதற்றினாள். பக்கத்தில் படுத்துக் கொண்டிருந்த பெரியாழ்வார் ஸ்ரீ க்ருஷ்ண சப்தத்தைக் கேட்டு எழுந்து கோதையை எழுப்பினார். கோதை எழுந்து, தான் கண்ட கனவை பெரியாழ்வாரிடம் கூற, ஆழ்வார் மிகவும் ஆனந்தத்துடன் கண்களில் நீர் பெருக, கோதையை தன் மடியில் அமர வைத்து க்ருஷ்ண கதைகளைக் கூறி தூங்க வைத்தார்.

கோதை, க்ருஷ்ண ஸ்மரணையிலேயே வளர்ந்து திருமண வயதை அடைந்தாள். கோதைக்கு, முன்பு இருந்ததை விட ஸ்ரீ க்ருஷ்ணன் மீதுள்ள பக்தி அதிகமாகியது. ஒரு சமயம், கோதை தான் க்ருஷ்ணனுக்கு பொருத்தமானவளா என்று பார்க்க நினைத்து, பெரியாழ்வார் வட பத்ரசாயிக்காக தொடுத்து வைத்திருந்த மாலையை எடுத்து தான் சூடிக்கொண்டு, நிலைக்கண்ணாடி முன்பு நின்று, தன் பக்கத்தில் க்ருஷ்ணன் இருப்பதாக பாவித்து ஆனந்தப்பட்டாள். பிறகு, தந்தை வரும் முன்பாக முன்பிருந்தபடியே பூமாலையை எடுத்து வைத்து விட்டாள். தினமும், இப்படியே செய்யலானாள்.

ஒரு சமயம், பெரியாழ்வார் பூமாலையை வடபத்ரசாயிக்காக எடுத்துச் செல்லும் பொழுது, அந்த மாலையில் ஒரு முடி இருக்கக் கண்டு அதிர்ச்சியடைந்தார். வீடு திரும்பி வேறொரு புதிய மாலையைக் கட்டி எடுத்துச் சென்றார். அடுத்த நாள், அதுபோல் மாலையை பெருமாளுக்காக கட்டி வைத்துவிட்டு அனுஷ்டானத்தை சீக்கிரம் முடித்து விட்டு தினமும் வரும் நேரத்தை விட சீக்கிரமாய் வர, கோதை மாலையைச் சூட்டிக் கொண்டு கண்ணாடி முன் நின்று அழகு பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு மிகவும் வருத்தமடைந்தார்.

பிறகு, அவர் கோதைக்கு, ''பெருமாளுக்கு சாற்றும் வஸ்த்ரம், புஷ்பம், சந்தனம் இவைகளை நாம் எடுத்துக்கொள்ளலாகாது. பகவானுக்கு அர்ப்பணித்த பின்புதான் ப்ரஸாதமாக ஸ்வீகரித்துக் கொள்ளவேண்டும்'' என்று உபதேசித்து வேறு ஒரு மாலையைக் கட்டி எடுத்துச் சென்றார். அன்று இரவு, வடபத்ரசாயி அவர் கனவில் தோன்றி, ''ஆழ்வாரே! நித்யம் நீர் எடுத்து வரும் மாலை மிகவும் வாசனையுள்ளதாகவும் எனக்கு பிடித்தமானதாகவும் இருக்கும்.

இன்று அவ்வாறு இல்லையே'' என்று கூறினான். பெரியாழ்வார், வருத்தத்துடன் பகவானைப் பார்த்து காரணத்தைத் தெரிந்துகொள்ள ஆசையுடன் வேண்ட, பகவானும், ''கோதை சூடிக் கொண்ட மாலையையே எனக்குச் சாற்றும், அதை நான் மிகவும் விரும்புகிறேன்'' எனக் கூறி மறைந்தான். கனவு கலைந்த ஆழ்வார், பக்கத்தில் உறங்கும் கோதையை, பிராட்டியார் ஸ்வரூபமாகவே பார்த்தார். பிராட்டியே தன்னுடைய க்ருஹத்தில் அவதரித்துள்ளதாக தீர்மானித்தார். கோதை, பகவானைத் தவிர வேறு யாரையும் மணக்கமாட்டாள் என்றும் புரிந்து கொண்டார். இந்நிகழ்ச்சிக்குப் பிறகு கோதையை, ஆண்டாள் (பகவானைத் தன்னுடைய மாலையால் வசீகரித்தாள்) என்று அழைத்தார். இன்றும், கோயில்களில் ஆண்டாள் திருக்கல்யாண உத்ஸவத்தில், ஆண்டாளுடைய மாலையை பகவானுக்கு சாற்றின பிறகே பகவானுடைய மாலையை ஆண்டாளுக்கு சாற்றுவார்கள். இந்நிகழ்ச்சியின் மூலம், ஆண்டாள் ''*சூடிக் கொடுத்த சுடர் கொடி*'' என்று அழைக்கப்பட்டாள்.

ஆழ்வார்கள் அனைவரும், அர்ச்சாவதாரத்தின் மஹிமையை அறிந்திருந்ததால், பகவானுடைய மற்ற நிலைகளான பரம், வ்யூகம், விபவம், அந்தர்யாமித்வம் முதலியவற்றையும் அர்ச்சாவதாரத்திலேயே ஏற்றி அனுபவிப்பர். ஆண்டாள் ஒவ்வொரு திவ்ய தேசத்தின் மஹிமையையும் பெரியாழ்வாரிடம் கேட்டு அறிந்திருந்ததால், அர்ச்சாவதாரத்திலேயே க்ருஷ்ணனுடைய லீலைகளை ஏற்றி பாசுரங்களை அருளினாள். ஆண்டாள், திருமாலிருஞ்சோலை கள்ளழகரை, தான் க்ருஷ்ணனை பர்த்தாவாக அடைந்தால் ஆயிரம் தடாக்களில் அக்காரவடிசல் செய்து அமுது செய்விப்பதாக ப்ரார்த்தனை செய்து அனுபவித்தாள். திருமலை வேங்கடவனையும், ஸ்ரீரங்கநாதனையும் க்ருஷ்ணனாகவே அனுபவித்தாள். அதில், ரங்கநாதனையே தலைவனாக பாவித்தாள்.

(தொடரும்)

முன் அட்டைப் படம் : கும்பகோணம் ஸ்ரீ சாரங்கபாணி பெருமாள் தாயாருடன்

பின் அட்டைப் படம் : கும்பகோணம் ''ராம மந்திரத்''தில் ஸ்ரீ ஸ்வாமிகள் ஸ்ரீ ராமருக்கு திருமஞ்சனம் செய்கிறார்.

This issue photos by : Sri Kalyanakrishnan

# நக்ஷத்ரங்களின் பெருமைகளும் விளக்கங்களும் - 1

- நித்யக்னிஹோத்ரி ப்ரஹ்மஶ்ரீ
**A. சுந்தரேச ஸர்மா வாஜபேயாஜி**

ஒவ்வொரு ஜீவராசியும் இருபத்தி ஏழு நக்ஷத்ரங்களில் ஒன்றில் ஜனிக்கிறது. அந்த நக்ஷத்ரங்களின் குணங்களைப் பொருத்து அந்த ஜீவராசியின் குணமும் அமைகிறது. எந்த ஒரு காரியத்தை எடுத்துக் கொண்டாலும் நாள், நக்ஷத்திரம் பார்த்து செய்ய வேண்டியது மிகவும் முக்கியமாகும். அவ்விதம் பார்த்துச் செய்வதால் மிக நன்மைகளும் காரிய ஸித்திகளும் ஏற்படுகிறது.

நக்ஷத்திரங்கள் இருபத்தி ஏழு, அச்'வினி முதல் ரேவதி வரை என்று ஜோதிஷம், புராணங்களில் கூறப்பட்டுள்ளன. வேதத்தில், க்ருத்திகை முதல் பரணி வரை என்று கணக்கிடப்பட்டுள்ளது. மேலும், வேதத்தில் உத்ராடத்திற்கு பிறகு அபிஜித் என்னும் ஒரு நக்ஷத்திரம் சொல்லப் பட்டுள்ளது. அதற்கு பிறகு திருவோணம். ஆக, 28 நக்ஷத்ரங்கள் என்று வேதத்தில் வருகிறது. உத்ராடத்தின் பின் இரண்டு பாதங்களையும் திருவோணத்தின் முன் இரண்டு பாதங்களையும் சேர்த்து அபிஜித் நக்ஷத்ரம் என்று வ்யவஹரிப்பது வழக்கு.

இனி, ஒவ்வொரு நக்ஷத்ரத்தைப் பற்றியும் நாம் விளக்கமாக பார்ப்போம். வேதத்தில் கூறப்பட்ட க்ரமமான க்ருத்திகையை முதலில் எடுத்துக் கொள்வோம்.

## க்ருத்திகை

க்ருத்திகை நக்ஷத்ரம் அக்னியை தேவதையாக கொண்டது. மேஷ, வ்ருஷப ராசிகளைச் சேர்ந்தது. க்ருத்திகை நக்ஷத்ரம், ஆகாச மண்டலத்தில், ஏழு நக்ஷத்ரங்களால் ஆன அடுக்கு தீபம் போல் ரூபம் காட்டப்படுவதாய் வான பராஸ்த்ரக்ஞர்கள் கூறுகிறார்கள். தை மாதம் 24-ந் தேதி முதல் மாசி மாதம் 7-ந் தேதி முடிய மாலை 6 மணிக்கு தலைக்கு நேராக ஆகாசத்தில் மேற்படி க்ருத்திகை நக்ஷத்ர ரூபம் தெரியும் என்பதாக கூறப்பட்டுள்ளது.

க்ருத்திகை நக்ஷத்ரத்தின் ஸ்வரூபம் மேஷ வாஹனம். நான்கு கைகள், ஸ்ருக், ஸ்ருவம், வரத, அபய ஹஸ்தங்களாக இருக்கின்றன. க்ருத்திகா நக்ஷத்ர யாகத்தில் ப்ரதான யாக மந்த்ரத்தில் நக்ஷத்ர அதிதேவதையான ஏழு நக்ஷத்ரங்களுடனான அக்னி எங்களை என்றும் காப்பாற்றட்டும். எந்த ஸ்வரூபத்தால், ப்ரபஞ்சம் முழுவதும் ப்ரகாசமாகிறதோ, அந்த தேவதை க்ருத்திகைகளுடன் இருந்து கொண்டு எங்களை என்றும் நல்வழிபடுத்தி நல்ல காரியங்களில் ஈடுபடுத்தட்டும் என்று ப்ரார்த்திக்கப்படுகிறது.

முதன் முதலில், சந்திரன், க்ருத்திகையில் தான் பரவேசித்தார். க்ருத்திகா நக்ஷத்ர தேவதையை உபாஸிப்பதால் அன்னாதனத்வ சக்தி நமக்கு (அன்னத்தை புஜிக்கும் சக்தி) பரிபூரணமாக ஏற்படும். அன்னம் என்பது உபலக்ஷணம். நம்மிடம் இருக்கும் ஐஸ்வர்யத்தை, போக போக்யங்களை அனுபவிக்கக் கூடியதான சக்தி நமக்கு ஏற்படும். அன்னத்வேஷம் உள்ளவர்கள், க்ருத்திகை நக்ஷத்திரத்தன்று, க்ருத்திகா நக்ஷத்ர தேவதையான அக்னியை உபாஸித்து விட்டு அன்னத்தை சாப்பிட்டால் அன்னத்வேஷம் போய்விடும்.

க்ருத்திகா நக்ஷத்ரத்தில் ஜனித்தவர்கள், கிடைத்த ஐஸ்வர்யத்தை அனுபவிப்பவர்களாக இருப்பார்கள். விசித்ரமான ஆடை, ஆபரணங்கள் அவர்களை வந்தடையும். தேஜஸ்வீகளாக இருப்பார்கள். நல்ல கீர்த்திமான்களாக ப்ரகாசிப்பார்கள். ஸ்த்ரீகளிடம் ப்ரியமாக நடந்து கொள்வார்கள். அக்னி உபாஸனத்தில் பற்றுள்ளவர்களாகவும், உலக நன்மையை குறிக்கோளாக உடையவர்களாகவும் இருப்பார்கள். சில சபலங்களும் இவர்களிடம் இருக்கும். பல பேர் நடுவிலும் இவர்கள் தனியாக ப்ரகாசிப்பார்கள். முதல் பாதத்தில் ஜனித்தவர்களிடம் படபடப்பும், உஷ்ணமும் குடி கொண்டிருக்கும். தைரியசாலியாகவும், பராக்ரமம் உடையவர்களாகவும் இருப்பார்கள்.

க்ருத்திகா நக்ஷத்ரகாரர்கள், ஸுப்ரமண்யரை உபாஸித்தால், மிகவும் க்ஷேமங்கள் ஏற்படும். குணங்கள் வ்ருத்தியடையும்.

*க்ருத்திகாஹ்யக்னி தைவத்யா:*
*மேஷவாஹன ஸம்ஸ்திதா: |*
*ஸ்ருக் ஸ்ருவாபீதி வரத்ருத்*
*சதுர்ஹஸ்தா நமாம்யஹம் ||*

(தொடரும்)

# பக்தர்கள் அவ்வப்பொழுது கேட்ட கேள்விகளுக்கு, ஸ்ரீ ஸ்வாமிகள் அளித்த பதில்கள்

- தொடர்ச்சி

*கேள்வி : நேரடியாக ஆத்ம விசாரம் செய்து வருபவர்கள், குருவின் க்ருபைக்காகவோ பகவானின் க்ருபைக்காகவோ ப்ரார்த்தனை செய்ய வேண்டியது அவசியமா?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : முதலில், பக்தி என்பது என்ன என்று பார்ப்போம். நாம் இறைவனிடமிருந்து பிரிந்து இருப்பதாக நினைத்து, மீண்டும் அவனுடன் இணைய, அவனுடைய க்ருபைக்காக உருகுவதே பக்தி என்பதாகும்.

உண்மையில், பகவான் எங்குள்ளார்? உண்மையில், நம் ஹ்ருதயத்திலேயே பகவான் வாஸம் செய்கிறார். இதையேதான், ஸ்ரீமத் பாகவதமும், ''அகில தேஹினாம் அந்தராத்ம த்ருக்'' என்று சொல்கிறது. ஆகவே, பகவானை வெளியில் தேடுவதைக் காட்டிலும் தனக்குள்ளேயே தேடுவதுதான் சரியான வழியாகும். அப்படி தேட முயற்சிக்கையில், ஸுலபமாகவே ஒருவனுக்கு குருவருளும் இறையருளும் ப்ரார்த்திக்காமலேயே கிடைத்து விடுகிறது.

*கேள்வி : மனதை எவ்வித ப்ரயத்தனமும் இல்லாமல் அடக்க ஸுலபமான வழி என்ன?*

பதில் : மனமழிந்த ஞானிகளின் ஸங்கத்தில் எப்பொழுதும் வாஸம் செய்வதே, மனதை எந்த விதமான ப்ரயத்தனமும் இல்லாமல் அடக்க ஸுலபமான வழியாகும்.

*கேள்வி : நாம் ஆழ்ந்து தியானம் செய்யும் பொழுது ஆனந்தம் ஏற்படுமா?*

பதில் : உலக ஸுகங்களை, நாம் விழிப்பு நிலையில் அனுபவிக்கும் பொழுது ஏற்படும் ஆனந்தம், விஷயானந்தம் எனப்படும். ஆழ்ந்த தியானத்தில் நம் மனது போகும் பொழுது, நிஸ்சயமாக ஆனந்தம் ஏற்படும். இது விஷயானந்தமும் அன்று, ப்ரஹ்மானந்தமும் அன்று. மனம் ஏகாக்ரப்படுவதால் ஏற்படும் ஆனந்தம் இது.

ஸுஷுப்தியில், அதாவது தூக்கத்தில் ஏற்படும் ஆனந்தத்திற்கும், தியானத்தில் ஏற்படும் ஆனந்தத்திற்கும் வித்தியாஸம் உண்டு. தூக்கத்தில், மனம் தமோ குணத்தை பிடித்துக் கொண்டுள்ளது. ஆழ்ந்த தியானத்தில், மனம் ஒரு சகுணத்தையோ அல்லது தன்னிருப்பையோ பிடித்துக் கொண்டிருப்பதால் உயர்ந்த ஸாத்வீக நிலை ஏற்படுகிறது.

ஆகவே, இங்கு ஶாந்தி கிடைக்கிறது. மனம் முழுவதும் நாஶமான பிறகு ஏற்படுவதே ப்ரஹ்மானந்தம். இது ஒப்பு உயர்வில்லாதது. சாஸ்வதமானது.

*கேள்வி : மனது, ஆத்ம ஸ்வரூபத்தைக் காட்டிலும் வேறானது என்று எப்படிச் சொல்ல முடியும்?*

பதில் : தாமஸமான ஆஹாரங்களையும், ஸாத்விகமான ஆஹாரங்களையும், ராஜஸமான ஆஹாரங்களையும் உட்கொள்ளும் பொழுது மனது விஹாரப்படுகிறது. அதுபோல், ஸ்வப்னத்திலும், மூர்ச்சை ஆகும் பொழுதும் மனம் அவிழ்ந்து விடுகிறது. இதிலிருந்து, மனது மாறுதலுக்கு உட்பட்டது என்பது தெரிய வருகிறது. ஆத்மாவோ, மாறுதல் அற்றதாக இருக்கிறது என்று நம்முடைய ஶ்ருதி கூறுகிறது. ஆதலால், மனம் ஆத்ம ஸ்வரூபத்தைக் காட்டிலும் வேறானது.

*கேள்வி : பக்தி ஸாதனைகளில் ஈடுபடுபவர்கள், அடிக்கடி தன்னிலை மறப்பது ஏன்?*

பதில் : ஆழ்ந்த பக்தியினால் அவர்களுக்கு தியானம் நன்றாக ஸித்தித்து விடுகிறது. ஆழ்ந்த தியானத்தில் மனம் கும்பகத்தை அடைவதால் அவர்கள் மூர்ச்சையாகி தன்னிலை மறக்கின்றனர்.

*கேள்வி : மனதிற்கு ப்ராரப்தம் உண்டா?*

பதில் : சரீர ஸம்பந்தமான விஷயங்களுக்குத்தான் ப்ராரப்தம் உண்டே தவிர, மனதிற்கு ப்ராரப்தம் கிடையாது. மனதை அடக்குவது விவேகிகளான நம் கையில் தான் இருக்கிறது.

# பாவ லோகத்தில் ஒரு ஸஞ்சாரம்

'ஒரு சமயம், எனக்கு ப்ரியமான ஸகியுடன், இரவு நேரத்தில், ஒரு மரத்தடியில் பேசிக் கொண்டிருந்தேன். வானில், அழகான பூரண சந்திரன் ஒளி வீசிக் கொண்டிருந்தான். நாங்கள், இது மாதிரி அடிக்கடி கூடி சம்பாஷிப்பதுண்டு. என் ஸகியும், நானும் உயிர் தோழிகள். ஒருவரைப் பிரிந்து மற்றொருவர் ஒரு க்ஷணம் கூட இருக்க முடியாது. இப்படி இருக்கையில், அன்று பேச்சு எங்கெல்லாமோ சுற்றி வந்து முடிவில் என் ஸகி என்னைப் பார்த்து, 'வாழ்க்கையில் எந்த ஆசையையும் வைத்துக் கொள்ளாதே, முடிவில் துக்கம் தான் ஏற்படும்' என்றாள்.

நான் எவ்வளவுதான் மறைத்துக் கொள்ள முயன்றும், என்னுடைய துக்க உணர்ச்சிகளை அடக்கிக் கொள்ள முடியவில்லை, அவள் சொன்னதைக் கேட்டவுடன், திடும் என்று இனம் புரியாத ஒரு துக்கம் என்னுள் தோன்றியதை, என் முகம் காட்டிக் கொடுத்து விட்டது. அதைக் கண்டவுடன் என் ஸகியோ பதறிவிட்டாள். அவள் என்னைப் பார்த்து, ''நான் ஒன்றும் சொல்லவில்லையே, ஆசைகளினால் துக்கம் ஏற்படும் என்று தானே சொன்னேன்'' என்றாள். நான் அவளிடம், ''ஒன்றும் இல்லை'' என்று பல முறைக் கூறியும், அவள் ஸமாதானம் ஆகாமல், 'ஏன் இப்படி துக்கப்படுகிறாய்?' என்று கேட்டவுடன், என்னை அடக்க முடியாமல் அழுது கொண்டே கூறலானேன்.

'வாழ்க்கையில் ஆசையே படக் கூடாது. ஆசை தான் துக்கத்திற்குக் காரணம் என்று சொன்னாய். ஆனால், என்னையும் அறியாமல் ஒரு பேராசை என்னுள் உதித்து விட்டது. சாதாரணமான ஆசையே படக்கூடாது என்கின்றாய். ஆனால், எனக்கு உதித்துள்ளதோ பேராசையாகும். அதை நினைத்துத் தான் வருந்துகிறேன்' என்றேன்.

அதைக் கேட்ட என் ஸகி, என்னிடம், ''உன்னைப் பற்றி எனக்கு நன்றாகத்தெரியும். உன்னுடைய மனதில் தவறான ஒரு ஆசை ஒருக்காலும் வராது. விவரமாகத்தான் சொல்லேன்' என்று கெஞ்சினாள். நானும் 'சரி சொல்கிறேன்' என்று கூறி அவளுடன் பேசிக் கொண்டே மெதுவாக நடக்கலானேன்.

'ஸகி! என்னுடைய வாழ்க்கையும் எல்லோருடைய வாழ்க்கையைப் போல் தான் போய்க் கொண்டிருந்தது. ஒரு வித்தியாஸமும் எனக்குத் தெரியவில்லை. ஒரு ஸமயம், ஒரு ஸாதுவின் ஸங்கம் எனக்கு ஏற்பட்டது.

அவர், ஏதோ ஒரு க்ரந்தத்தைப் படிப்பதும், அழுவதுமாகவும், சில சமயம் ஆனந்தம் அடைந்து மேனி சிலிர்த்துக் கொண்டும் இருந்தார். முதலில் அவருடைய செய்கைகளைப் பார்த்து எனக்கு சிரிப்பு தான் மேலிட்டது. ஒருக்கால், அவருக்கு ஏதாவது சித்த ஸ்வாதீனம் இல்லாமல் இருக்குமோ என்று தான் நினைத்தேன். நினைத்ததுதான் நினைத்தேனே, அப்படியே வந்திருக்கக் கூடாதா? என் வாழ்க்கையில் அப்பொழுது தான் விதி விளையாடியது.

அவர் என்ன புத்தகத்தைப் படித்திருப்பார்? ஏன் அப்படி அழுதார்? ஏன் ஆனந்தம் அடைந்தார்? என்ற கேள்விகள் ஒன்றன் பின் ஒன்றாக மேன் மேலும் என் உள்ளத்தில் வந்து கொண்டே இருந்தது. எவ்வளவு முயன்றும், என்னால் அவற்றைப் பற்றிய எண்ணங்களை உதறித் தள்ள முடியவில்லை. முயன்று முயன்று அவர் படித்த புத்தகத்தின் அட்டையில் ''ஸ்ரீமத் பாகவதம்'' என்று எழுதியிருப்பதை என் சிந்தனையில் கொண்டு வந்து விட்டேன். இரண்டு நாட்களில், எனக்குப் பிறந்த நாள் வந்தது. அன்று, புத்தாடைகளை அணிந்து கொண்டு பெரியவர்கள் எல்லோரையும் நமஸ்கரித்து மிகவும் குதூஹலத்துடன் இருந்தேன். மாலையில், என் தாயார், என்னைப் பார்த்து, 'இன்று உன் ஜன்ம நக்ஷத்திரம், ஸ்ரீ வேணுகோபாலன் கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்து வருவோம்' என்று கூறி என்னை அழைத்துச் சென்றார்.

கோவிலில் நுழையும் முன்பே, யாரோ ஒருவர் உபன்யாஸம் நிகழ்த்துவது என் காதில் கேட்டது. நாங்கள் உள்ளே போன சமயம் உபன்யாஸம் முடிந்து விட்டது. உபன்யாஸம் செய்தவரை எல்லோரும் அருகில் சென்று நமஸ்கரித்து வந்து கொண்டிருந்தார்கள். என் தாயாரும், 'வா, நாமும் ஸேவிக்கலாம்' என்று கூறி அழைத்துச் சென்றார்கள்'.

அவரைப் பார்த்தவுடன் எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. சில நாட்களுக்கு முன்பு நான் பார்த்த அந்த ஸாதுவே தான் இவர். என் தாயார், அந்த ஸாதுவிடம், ''என் பெண்ணிற்கு இன்று ஜன்ம நக்ஷத்திரம். தேவரீர் அனுக்ரஹிக்க வேண்டும்'' என்று பவ்யத்துடன் விண்ணப்பித்துக் கொண்டார். அந்த ஸாதுவும், சிரித்துக் கொண்டும், எங்கேயோ பார்த்துக் கொண்டும் அவர் அன்று கையில் வைத்து படித்துக் கொண்டிருந்த அந்த ''ஸ்ரீமத் பாகவத'' புத்தகத்தையும் சில புஷ்பங்களையும் என் கையில் கொடுத்து ''க்ஷேமமாய் இரு'' என்று சொல்லி ஆசீர்வதித்தார்கள். அது வரை, எனக்கு எல்லாம் விளையாட்டாகவே இருந்தது.

மறுநாள், தனிமையில் இருந்தேன். பொழுதே போகவில்லை, அவர் கொடுத்த புத்தகத்தைத் தான் படித்துப் பார்க்கலாமே என்று படிக்க ஆரம்பித்தேன். அவ்வளவு தான்! தாயாரை விட்டு ஒரு க்ஷணம் கூட எப்படி குழந்தை பிரிய விரும்பாதோ, தாயாரும், குழந்தையை விட்டு ஒரு க்ஷணம் கூட எப்படி பிரிந்திருக்க முடியாதோ, அது போல அந்த புத்தகம் என்னை விடவில்லை. என்னாலும் அதை விட்டு ஒரு க்ஷணம் கூட இருக்க முடியவில்லை. எத்தனையோ முறை நான் அதை படித்திருக்கிறேன், ஆனால் ஒவ்வொரு முறையும் புதிது புதிதாகவே அது இருந்து வருகிறது.

எனக்கு, அதைப் படித்தது போதும் என்றே தோன்றவில்லை. இப்பொழுது, என்னைப் பார்க்க எனக்கே பரிதாபமாகி விட்டது. அந்த ஸாதுவின் நிலையே தேவலாம். அவரோ ஸந்யாஸி, விரக்தர். நானோ ஸ்திரீ, ரஸிகை, தனிமையில் அழுவதும், சிரிப்பதும், எனக்கு நானே அலங்கரித்துக் கொள்வதும், உறங்காமல் தவிப்பதுமாக உள்ளேன். ஆனால், என்னுடைய பாவ அனுபவங்கள் எல்லாம் ரஹஸ்யமானது. என் அருகில் உள்ளவர்களுக்குக் கூட அவை தெரியாது. பாவ லோகத்தில் ஸஞ்சாரம் செய்து வருகின்றேன்.

ஒரு நாள் இரவு, என்னை வெகுவாக அலங்கரித்துக் கொண்டேன். என் வீட்டு மாடியில் எனக்கு என்று தனி அறை உண்டு. அன்று, ராஸ பௌர்ணமி தினம். சிறிது நேரம் சந்திரனை பார்த்துக் கொண்டிருந்து விட்டு, எப்பொழுது அறையின் உள்ளே சென்று கட்டிலில் படுத்தேன் என்று எனக்கே தெரியாது. என்னை அறியாமல் உறங்கி விட்டேன். யாரோ, கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. எனக்கு தூக்கி வாரி போட்டது. இந்த அகால நேரத்தில் யாராக இருக்கும்? என்று தோன்றியது. அப்பொழுது தனிமையில் இருக்கும் ஒரு ஸ்த்ரீ பயப்படத்தானே வேண்டும்! ஆனால், சிறிது கூட எனக்கு பயமே தோன்றவில்லை. மெல்ல நடந்து சென்று கதவைத் திறந்தேன். கதவை திறக்கும் எண்ணத்தில் தீபத்தைக் கூட ஏற்றவில்லை.

நான் கதவைத் திறந்தவுடன் திடும் என்று கண்ணைப் பறிக்கும் ஒரு ஒளி தோன்றியது. பிறகு, நான் இது வரை அனுபவித்திராத சுகந்தமான வாஸனை தோன்றி, என்னை மயக்கத்தில் ஆழ்த்துவது போல் இருந்தது. அந்த ஒளியின் நடுவில், பாகவதத்தின் நாயகனான கண்ணன் மெதுவாக என் அறைக்குள் நடந்து வந்தான். ஒரு மந்தஹாஸம் செய்து, ஆச்சரியத்தில் திறந்திருந்த என் வாயை தன்னுடைய கோமளமான கைகளினால் பொத்தினான். என் தோள்களை தன்னுடைய கைகளால், ஆதரவுடன் அணைத்து, கட்டிலில் அமரச் செய்து, தானும் என் பக்கத்தில்

அமர்ந்து கொண்டான். என்னுடன் ஏதேதோ பேசினான். அவனுடைய பேச்சுகளில் அடிக்கடி கோதை, மீரா, விசாகா என்று சொன்னது மட்டும் ஞாபகம் இருக்கிறது. தன் கரங்களினால் என் தலையில் அவனே பூக்களையும் சூட்டி விட்டான்.

மீண்டும் கதவு தட்டும் சப்தம் கேட்டது. கதவைத் திறந்துப் பார்த்தால் என் தாயார். ''என்ன, பொழுது விடிந்தும் இத்தனை நேரம் தூங்குகிறாய்?'' என்று கோபித்துக் கொண்டார். ஓஹோ! நேற்று இரவு நான் கண்டது எல்லாம் கனவா? ஒன்றும் புரியவில்லையே. என் தலையில் பூக்கள் புத்தம் புதியவைகளாகவே இருந்தன. நேற்று இரவு, நான் தலைக்கு பூ வைத்துக் கொள்ளவில்லையே. அறை முழுவதும் ஒரு ப்ரசாந்தியும் சுகந்தமான வாஸனைகளும் நிரம்பியிருந்தது. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அவன் மீண்டும் என்னைக் காண வருவான் என்று நான் காத்துக் கொண்டிருக்கிறேன். இது பேராசை அல்லவா? அதனால் தான் நீ ஆசைகளே படக்கூடாது என்று சொன்னவுடன் எனக்கு துக்கம் மேலிட்டு விட்டது' என்று கூறி முடித்தேன்.

இதையெல்லாம் கேட்ட என் ஸகி என்னிடம், ''இதில் என்ன பேராசை உள்ளது?'. என்றாள். 'அவனுடைய அழகு, அறிவு, குணங்கள், ஐஸ்வர்யம், காம்பீர்யம், மஹிமை போன்ற எந்த விஷயமும் என்னிடம் துளிக்கூட இல்லை. அப்படியிருக்கையில், நான் அவனுக்காக ஆசைப் படுவது பேராசையில்லையா?' என்றேன் நான். 'பிறகு எந்த தைரியத்தில் இந்த விஷயத்தில் ஆசையை வளர்த்துக் கொண்டு வருகிறாய்?' என்றாள் என் ஸகி. ''அவனுடைய குணங்களுக்கும், மஹிமைகளுக்கும், அழகுக்கும், காம்பீர்யத்திற்கும், ஐஸ்வர்யத்திற்கும் இணையாக யார் தான் கிடைக்கப் போகிறார்கள்? ஒருவரும் கிடைக்க மாட்டார்கள் என்ற தைரியம் தான். ஒருக்கால் இன்றும் அவன் வரலாம். நான் கிளம்புகின்றேன்'' என்றேன்.

'இவ்வாறெல்லாம் புலம்பி விட்டு அவன் இன்று வருவான் என்று எப்படி எதிர்பார்க்கின்றாய்?' என்று கேட்டாள் என் ஸகி. 'இவ்வளவு குணங்கள், மஹிமை, அழகு, காம்பீர்யம், அறிவு நிறைந்துள்ள அவனிடம் ஒரு மிகப் பெரிய குறையும் உள்ளது. அது அவனிடம் இருப்பதால் தான் நான் பிழைத்தேன். இப்பேர்ப்பட்ட உன்னத விஷயங்கள் உள்ள அவனால் ஒரு க்ஷணம் கூட தனித்திருக்க முடியாது என்ற குறை தான் அது' என்று சொல்லிக் கொண்டே வீடு நோக்கி ஓடி வரலானேன்.

– ஸ்ரீ க்ருஷ்ண பாதரேணு

# நாம ஸங்கீர்த்தனம்

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆக்ஞையின் பேரில், ஒரு நாம ஸங்கீர்த்தன இளைஞர் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் குழு, ஒவ்வொரு வீடாகச் சென்று ''ஹரி நாம ஸங்கீர்த்தனம்'' செய்ய சித்தமாக உள்ளது. இந்த நாம ஸங்கீர்த்தனத்தில்

*''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே*
*ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே''*

என்னும் கலியை நாசம் செய்ய வல்லமை படைத்த மந்திரத்தை இரண்டு மணி நேரம் தொடர்ந்து ஜபிக்கப்படும். இதை எல்லா ஞாயிற்றுக் கிழமைகள், மற்றும் அரசாங்க விடுமுறை நாட்களில் காலை 9 மணி முதல் 11 வரை அல்லது மாலை 3 மணி முதல் 5 மணி வரை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நாம ஸங்கீர்த்தனத்திற்கு வரும் குழுவிற்காக எந்த விதமான கட்டணமும் இல்லை. பிரசாத விநியோகமோ, பணச் செலவோ கிடையாது. இதில் ஸ்த்ரீகள், புருஷர்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம். அக்கம் பக்கத்து வீடுகளில் உள்ள தெரிந்தவர்களையும் கலந்து கொள்ளச் சொல்லலாம். இதனை ஏற்பாடு செய்தவர்களுக்கும் கலந்து கொண்டவர்களுக்கும் உள்ள எல்லா விதமான ப்ரச்னைகளும் தீர்ந்து விடுவது ப்ரத்யக்ஷம்.

இந்த நாம கீர்த்தனம், தங்கள் வீடுகளில் நடத்த விருப்பம் உள்ளவர்கள், தங்களின் பெயர், முழு விலாசம், நடத்த விருப்பமுள்ள தேதி, நேரம் (காலை அல்லது மாலை) என்கிற விபரங்களை முன் கூட்டியே கீழ்க்கண்ட முகவரிக்கு கடிதம் எழுதி அதன் உறை மீது ''நாம ஸங்கீர்த்தனம்'' என்று எழுதி அனுப்பவும். கடிதம் மூலம் மட்டுமே தொடர்பு கொள்ளவும். தொலைபேசி மூலமாகவோ நேரிலோ ஸ்ரீ ஸ்வாமிகளை இது விஷயமாக தொடர்பு கொள்வதைத் தவிர்க்கவும்.

*முகவரி :*

**குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்**
'ப்ரேமிக பவனம்',
24, நேதாஜி நகர், ஜாபர்கான் பேட்டை,
சென்னை - 600 083.

# ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து - 23

(பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் அருணாசல அக்ஷர மண மாலை - ஸ்ரீ குருஜியின் உபன்யாஸத்திலிருந்து சில பகுதிகள் - தொடர்ச்சி)

*ஓங்காரப் பொருளே ஒப்புயர் வில்லோய்*
*உனையாரறிவார ருணாசலா* 13

இங்கு பகவான், அருணாசலேஸ்வரரை ஓங்காரப் பொருள் என்று வர்ணிக்கிறார். ஓங்காரத்தின் பெருமை, பல க்ரந்தங்களில் கூறப்பட்டுள்ளது. வேதத்தில் மாண்டூக்ய உபநிஷத்தில், ஓங்காரத்தின் விசாரம், க்ரந்தம் முழுவதும் வருகிறது. ஓங்காரத்தின் லய ஸ்தானத்தைச் சொல்லும் பொழுது சிவம் என்று தீர்மானித்துச் சொல்கிறார்கள், மஹரிஷிகள். இங்கு, சிவம் என்று சொல்லப் படுவது சகுண மூர்த்தியை அல்ல. சிவம் என்றால் கல்யாணம், நிர்குணம், மங்களம் என்று பொருள். இது ஆத்ம ஸ்வரூபத்தை குறிப்பதாகும். இந்த ஓங்காரத்தின் லயம், ஜாக்ரத், ஸ்வப்னம், ஸுஷுப்தி என்னும் மூன்று விதமான ஸ்திதிகளைக் கடந்து துரிய அவஸ்தையில் இருக்கிறது.

ஓங்காரப் பொருளாக இருப்பது, சைதன்யமாக இருக்கக் கூடிய ஆத்ம ஸ்வரூபம் தான். இதனாலேயே, ப்ரஹ்ம நிஷ்டர்கள், எப்பொழுதும் ப்ரணவ ஜபத்திலேயே இருக்கிறார்கள். இந்த ஓங்காரத்திற்கு ஒரு ரூபமும் கிடையாது. ரூபம் சொல்ல வேண்டும் என்றால் ப்ரஹ்மத்தைச் சொல்லலாம். அப்பேர்பட்ட ஓங்காரத்தின் பொருளாக இருக்கக் கூடியவர் அருணாசலேஸ்வரர் தான் என்பதை ''ஓங்காரப் பொருளே'' என்று விளிப்பதன் மூலம் பகவான் சொல்கிறார். அடுத்ததாக, 'ஒப்புயர் வில்லோய்' என்று மேலும் விளிக்கிறார். இந்த ஓங்கார மந்திரத்திற்கு ஒப்பான மந்திரமோ அல்லது அதைவிட உயர்ந்த மந்திரமோ கிடையாது. ப்ரஹ்மத்தைக் காட்டிலும் உயர்ந்த வஸ்து இருக்க முடியாது. அந்த ப்ரஹ்மம் நம் ஆத்ம ஸ்வரூபம் தான். இந்த ஆத்ம ஸ்வரூபத்திற்கு ஈடு இணையானது இல்லை. அப்படி ஒரு ஶ்ரேஷ்டமானதை, ஒருவன், ஒருக்கால் வெளியில் தேடிக் கொண்டு சென்றால், அவன் தன்னிடம் இருக்கிற ஆத்ம ஸ்வரூபத்தைத்தான் அடைந்தாக வேண்டும்.

இதற்கு, உபமானமாக ஒரு கதை இருக்கிறது. ஒரு ஊரில் ஒரு ஸ்த்ரீ இருந்தாள். அவளுக்குக் கல்யாணம் செய்து வைக்க எண்ணிய அவள் தந்தை, ஒரு வரனைப் பார்த்து அவளிடம் சம்மதம் கேட்டார். அவளோ, 'இந்தப் பையனை நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போவதில்லை, இந்த ஊரிலேயே உயர்ந்தவராக இருக்கிறவரைத் தான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன். நானே அந்த வரனைத் தீர்மானம் செய்கிறேன்' என்று சொன்னாள். பிறகு, வரனைத் தேடிக் கொண்டு போகையில் ஊரில் உள்ள பலரை விசாரித்து, அந்த ஊர் ராஜாதான் உயர்ந்தவர் என்று அறிந்து, அவரை கல்யாணம் செய்து கொள்ள நினைத்து, ராஜாவின் பல்லக்கின் பின்னாலேயே, அவருக்குத் தெரியாமல் சென்றாள்.

ஒரு இடத்தில், அந்த ராஜா பல்லக்கில் இருந்து கீழே இறங்கி, ஒரு ஸ்வாமிஜிக்கு வந்தனம் செய்தார். இந்த ராஜா, ஸ்வாமிஜிக்கு வந்தனம் செய்கிறார் என்றால், ஸ்வாமிஜி, ராஜாவைக் காட்டிலும் உயர்ந்தவர் என்னும் தீர்மானத்திற்கு அந்த ஸ்த்ரீ வந்தாள். ராஜா சென்ற சற்று நேரத்தில், அந்த ஸ்வாமிஜி அங்குள்ள அரச மரத்தடியில் அமர்ந்திருக்கின்ற ஒரு பிள்ளையாரை ஸேவித்தார். இதை கவனித்தவள், பிள்ளையார் தான் ஸ்வாமிஜியைக் காட்டிலும் உயர்ந்தவர் என்று தீர்மானித்து அங்கேயே இருந்தாள்.

ஒரு நாய், அந்த இடம் வந்து பிள்ளையார் அருகில் அசுத்தம் செய்தது. இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு சிறு பையன் நாயை கல்லால் அடித்தான். 'அந்த நாயை ஏண்டா அடித்தாய்?' என்று ஒருவர் அந்தப் பையனை மிரட்டினார். இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் கவனித்து வந்த ஸ்த்ரீயோ, 'பிள்ளையார் ஸ்வாமிஜியை விட உயர்ந்தவர். நாய் அவரை விட உயர்ந்தது. அந்த சிறுவன் நாயைவிட பெரியவன். அந்தச் சிறுவனை மிரட்டிய அந்த ஒருவரே எல்லோரைக் காட்டிலும் உயர்ந்தவர்' என்று தீர்மானித்து அவரையே தனக்குரிய வரனாக முடிவெடுத்து தன் தந்தையிடம் போய்ச் சொன்னாள். அந்த வரன், அவர் தந்தை பார்த்த வரனே என்பதை பிறகு உணர்ந்து வெட்கித்தாள்.

அதுபோல் தான், 'ஒப்புயர்வில்லாத' இந்த ஆத்ம ஸ்வரூபமாகிய ப்ரஹ்மானந்தம். உலகில் வேறெங்கேயோ இருக்கிறது என்று தேடிக் கொண்டு போனால், அது எங்கேயும் காணாமல் நமக்குள்ளே தான் இருக்கிறது என்று கடைசியில் உணரப் போகிறோம்.

அந்த ஒப்புயர்வில்லா ஆத்ம ஸ்வரூபமான ஓங்காரப் பொருள் தான் அருணாசலேஸ்வரர் என்பதை பகவான் ''ஒப்புயர்வில்லோய்'' என்று சொல்கிறார். இந்த அருணாசலேஸ்வரருக்கு ஒப்பானதும் உயர்வானதும் ஆன ஒன்று உலகில் கிடையாது. அப்பேர்ப்பட்ட உன்னை யார் புரிந்து கொள்ள முடியும் என்பதை ''உனையாரறிவாரருணாசலா'' என்று மேலும் வியக்கிறார். ஏனென்றால், அறிந்தாரும் உன்னைப் பற்றி வெளியே சொல்ல முடியாது.

புத்தி, மனம், வாக்கு இவற்றிற்கு எட்டாத ஒரு பொருளைப் பற்றி வாக்கினால் எப்படிச் சொல்ல முடியும்? அதை அனுபவத்தினால் தான் உணர்ந்து கொள்ள முடியும். ஒருக்கால், சாஸ்திர விசாரத்தினால் இப் பொருளை புரிந்து கொள்ள முடியுமா என்றால் அதனாலும் புரிந்து கொள்ள முடியாததாகவே அது இருக்கிறது. உதாரணமாக, உலக்கையைக் கொண்டு நாம் வேப்பிலையை இடிக்கிறோம், பிறகு வெல்லத்தை இடிக்கிறோம், மிளகாயையும் இடிக்கிறோம். ஆனால், அந்த உலக்கைக்கு அவைகளின் ருசி தெரிவதில்லை.

அது போல், சாஸ்திர ஜ்ஞானத்தினால், நமது புத்தியைக் கொண்டு இது அத்வைதம், இது வசிஷ்டாத்வைதம், இது த்வைதம் என்று சொன்னாலும் அனுபூதியில் தான் இவற்றை உணர்ந்து கொள்ள முடியும். அனுபூதி தான் எல்லாவற்றிற்கும் 'ப்ரமாணம்'. சாஸ்த்திர வாதத்தில் புத்திசாலியாக இருப்பவன் தான் ஜெயிக்கிறானே ஒழிய வாஸ்தவத்தில் சித்தாந்தம் ஜெயிப்பதில்லை ஆதலால் வாதத்தினால் பயன் ஒன்றும் இல்லை. அனுபூதியினால் தான் உணர முடியும்.

அத்வைதத்தில், வாதத்திற்கு இடம் இல்லை. ஏனென்றால், அத்வைதம் ஏனைய சித்தாந்தங்களை ஒத்துக் கொள்கிறது. அதில், த்வைதம் இருக்கிறது. வசிஷ்டாத்வைதம் இருக்கிறது. அத்வைதமும் இருக்கிறது. அத்வைதம் தான் முடிவாகும். அதனால், வ்யவஹார சத்தியமாக இருப்பதை அத்வைதம் ஒத்துக் கொள்கிறது.

ஒருவன், சென்னையிலிருந்து மாயவரம் செல்கிறான். அப்படி போகும் பொழுது சிதம்பரம், சீர்காழி தாண்டித்தான் போகவேண்டும். அதனால், அவனுக்கு சிதம்பரமும் சீர்காழியும் உண்டு. ஆனால், சிதம்பரத்திலேயோ, சீர்காழியிலேயோ இறங்கினவனுக்கு மாயவரம் இல்லை. அது போல், அத்வைத விசாரம் செய்பவனுக்கு த்வைதம் இருக்கிறது. வசிஷ்டாத்வைதம் இருக்கிறது. ஆகையால், அங்கு வாதப் ப்ரதிவாதங்கள் இல்லை.

கடோ உபநிஷத்திற்கு ஸ்ரீ சங்கரர் பாஷ்யம் எழுதியிருக்கிறார். அதில் வரக்கூடிய சாந்தி பாடத்தைச் சொல்லும் காலத்தில்,

*"பூர்ணமத பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே*
*பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ண மேவா வஸிஷ்யதே"*

என்று வருகிறது. இதன் அர்த்தம், 'பூர்ணத்திலிருந்து எதை எடுத்தும் அது பூர்ணமாக இருக்கிறது' என்பதாகும். பூர்ணத்திலிருந்து ஒன்றை எடுத்த பிறகும் இருப்பது பூர்ணம் என்றால், எடுத்த பொருள் நிஜம் இல்லை என்று ஒரு வாதம் வருகிறது. அது பூர்ணத்தினால் ப்ரதிபலிக்கிறதே ஒழிய அதற்கு ஒரு யதார்த்தமும் இல்லை. பூர்ணம் தான் பூர்ணமாக இருக்கிறது.

இந்த உலகத்தில் ப்ரஹ்மம் என்றும், ப்ரக்ருதி என்றும் இரண்டு வஸ்துக்கள் இருப்பதை ஒப்புக் கொள்ள முடியாது. இந்த லோகத்தை பகவான் ப்ரக்ருதியை கொண்டு படைத்ததாக சொல்கிறோம். அப்படியானால், பகவானுக்கு முன் ப்ரக்ருதியா அல்லது பின்னால் ப்ரக்ருதியா என்றும் பகவானும் ப்ரக்ருதியும் இரண்டுமே அனாதியா என்றும் கேள்விகள் எழுகின்றன.

பகவானும் (அதாவது ஆத்ம சைதன்யமும்) அனாதி, ப்ருக்ருதியும் அனாதி என்று பதில் சொன்னால், உபநிஷத்தில் "ஸ ஏக:" என்று வருகிறது. ஒன்று தான் இருக்கிறது என்று உபநிஷத் சொல்கிறது. பகவானும் இருக்கிறான், ப்ரக்ருதியும் இருக்கிறது என்று சொன்னால் உபநிஷத் வாக்கியம் அடிப்பட்டு போய்விடும். வேதத்தின் முடிவாக சாரமாக இருப்பதுதான் வேதாந்தம் (உபநிஷத்துக்கள்). அதை ஒரு காலத்திலும் தள்ள முடியாது. ஒன்று தான் இருக்கிறது என்பதை பிறகு எப்படி நிர்ணயம் பண்ணுவது?

சைதன்யத்திலிருந்துதான் ப்ரக்ருதி வெளியே வந்தது. ஆனாலும், இந்த ப்ரக்ருதி சைதன்யத்திற்கு அன்யமாக இல்லை. ஒரு சிலந்தி பூச்சி இருக்கிறது. அது தன் வாயிலிருந்து நூலை இழுத்து இழுத்துக் கூடு கட்டியதால் சிலந்தி வேறு ஒன்றாக மாறவில்லை. அது அப்படியே தான் இருக்கிறது. அது தன் வாயினுள் திருப்பி நூலை இழுத்துக் கொள்ளும் பொழுதும் அப்படியே தான் இருக்கிறது.

அது போல், ஈஶ்வரனிடமிருந்து தான் இந்த உலகம் வந்துள்ளது என்று ஒப்புக் கொண்டால் கூட இந்த உலகம் ஈஶ்வரனுக்கு அன்னியமாக இல்லை. அது போல், ப்ரளயத்தில் இந்த ஜகத் சைதன்யத்தில்தான் லயமாகப் போகிறது. ஆகவே, அத்வைதம் என்பது தான் சத்யம் என்பது நிர்ணயமாகிறது.

இந்தப் பாட்டில், ஓங்காரப் பொருளே, 'உனையார் அறிவார்' என்று அருணாசலேஸ்வரனைக் கேட்கும் பொழுது, அருணாசலேஸ்வரனை யாரும் தானாகத் தெரிந்து கொள்ள முடியாது என்பது தான் அர்த்தம். பிறகு எப்படி தெரிந்து கொள்ள முடியும் என்றால், 'நீ யாருக்கு க்ருபை செய்கிறாயோ அவர் தான் உன்னை தெரிந்து கொள்ள முடியும். யாருக்கு குருநாதருடைய க்ருபை இருக்கிறதோ, அவர் தான் தெரிந்து கொள்ள முடியும். ஒருக்காலும் தன்னுடைய சாமர்த்தியத்தினால் இதை அடைய முடியாது. ''ஆத்மா யாரை வரிக்கிறதோ அவர் ஒருவரே ஆத்மாவை அறிகிறார்'' என்று இருக்கிறது. அப்படித் தெரிந்து கொண்ட பிறகு பேச்சு என்பது இல்லாமல் போய்விடும். அனுபூதிக்கு பிறகு பேச்சு என்பது இல்லை. 'சும்மா இரு சொல்லற என்றலுமே அம்மா பொருளொன்றும் அறிந்திலேனே' என்று கந்தரனுபூதியில் வருகிறது. அந்த க்ரந்தத்திற்கு அனுபூதி என்றே பெயர். ''பேசா அனுபூதி பிறந்தது அதுவே'' என்றும் அதில் வருகிறது. அனுபூதி வராதவர்கள் தான் பேசுவார்கள். அனுபூதி வந்தவர்களிடம் ஆழ்ந்த அனுபவம் மட்டும் தான் இருக்கும்.

''ஓங்காரப் பொருளே ஒப்புயர்வில்லோய்'' என்பதை நாயகி பாவத்தில் பார்ப்போம். ஒரு லௌகிகமான குடும்பம் ஒன்று இருக்கிறது. பக்தி சம்பந்தமான குடும்பம் ஒன்று இருக்கிறது. ஒரு வஸ்துவை விசாரம் செய்யும் பொழுது, அவரவர்களுக்கு வாஸனை எப்படி இருக்கிறதோ, அவரவர் புத்தி அதை எப்படி ஓட்டிப்போகிறதோ, அதுபடியே தீர்மானம் செய்கிறோம். வெளியே நடக்கும் எல்லா விஷயத்தையும் நம் மனோபாவம் கொண்டுதான் பார்க்கிறோம். அதனால், இந்த லௌகிகமான குடும்பத்தில் உள்ள நாயகியாக இருந்தால் இவளுக்கு நிச்சயம் செய்யப்பட்ட வரன் எப்படி இருக்கிறார் என்று கேட்டால் தெரிந்த உறவினர் பெயரைச் சொல்லி அதுபோல் இருப்பதாக அந்த நாயகிச் சொல்வாள்.

இதே நாயகி, பக்தி குடும்பத்தில் இருந்தால் பார்த்த வரன் க்ருஷ்ணனாக இருக்கிறார் என்று கூறுவாள். இந்த நாயகி தன்னுடைய வரனான அருணாசலேஸ்வரனை ஓங்காரத்திற்கு ஒப்பிடுகிறாள். ஓங்காரத்திற்குச் சமமானவர் தனக்கு வாழ்க்கைப்படப் போகிறார் என்று பெருமைப் படுகிறாள். அதனால்தான் ''ஓங்காரப் பொருளே'' என்று விளிக்கிறார் பகவான்.

(தொடரும்)

தொகுப்பு: முரளிதரதாஸன்



ஸமீபத்தில், கும்பகோணத்தில நடந்த ஸ்ரீ மஹா பெரியவாளின்
104வது ஜயந்தி உத்ஸவத்தில் ஸ்ரீ ருத்ர ஹோமம் நடைபெறுகிறது.

# செய்திகள்

## மே 18-ந் தேதி முதல் 22-ந் தேதி வரை

ப்ரதி வருஷமும், நம்முடைய மிஷன் சார்பில் ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவாளின் ஜயந்தி மஹோத்ஸவம் மிக விமர்சையாக கொண்டாடப்படுவது வழக்கம். ஸ்ரீ மஹா பெரியவாளின் 100-வது ஜயந்தி உத்ஸவம், மோக்ஷபுரியாம் காசி மஹா க்ஷேத்ரத்தில், விமரிசையாக கொண்டாடப்பட்டது.


இந்த வருடம், *மஹா பெரியவாளின் 104-வது ஜயந்தி மஹோத்ஸவம்,* பாஸ்கர க்ஷேத்ரமான *கும்பகோணத்தில்* வராககுளம் கீழ்க்கரையில் அமைந்துள்ள *''ஸ்ரீ ராம மந்திரத்தில்''* கொண்டாடப்பட்டது.

ஸ்ரீ ''ராம மந்திர''த்தின் சொந்தக்காரர் ஸ்ரீ ரமேஷ், ராம மந்திரத்தை மிகவும் சந்தோஷத்துடன், வைபவம் இனிது நடக்கக் கொடுத்து உதவினார். அத்துடன் மட்டுமில்லாமல், உத்ஸவத்தின் பொழுது கைங்கர்யம் செய்தும் வைபவத்தில் முழுவதும் கலந்தும் கொண்டார்.

ஸ்ரீ ''ராம மந்திர''த்தைப் பற்றி அவர் தெரிவிக்கையில், ஸ்ரீ மஹா பெரியவாள், தன்னுடைய சொந்த இடமாகவே அதை பாவித்து வந்ததாகவும், தன்னுடைய அனுமதி இல்லால் ஒரு சிறிய காரியம் கூட அங்கு நடக்கக் கூடாது என்ற விஷயத்தில், மிகவும் கண்டிப்பாக இருந்தார் என்பதனையும் நம் ஸ்வாமிகளிடம் தெரிவித்தார். இத்தன்மையதான ஒரு இடத்தில், ஸ்ரீ மஹா பெரியவாளின் ஜயந்தி மஹோத்ஸவம் நடைப்பெற்றது நம் பாக்கியமே.

உத்ஸவத்தின் பொழுது, மே 18-ந் தேதி அன்று மாலை, மதுரை ஸ்ரீ டி.என். சேஷகோபாலன் சிஷ்யர் சிரஞ்சீவி கஸ்தூரிரங்கன் அவர்களின் கர்நாடக ஸங்கீத கச்சேரியுடன் ஜயந்தி மஹோத்ஸவம் தொடங்கியது.

மறு நாள், 19-ந் தேதி அன்று, தருமையாதீன ஆஸ்தான வித்வான் ஸ்ரீ சாமி தண்டபாணி ஓதுவார் அவர்களின் தேவார இன்னிசை நடைப்பெற்றது. அதற்கு மறு நாள் மாலையில், கும்பகோணம் மேலக்காவிரியைச் சார்ந்த மஹா வித்வான் ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகள், ஸ்ரீ மஹா பெரியவாளைப் பற்றி உபன்யாஸம் செய்தார்கள்.



அவர், தம்முடைய உபன்யாஸத்தில், பெரியவாளிடம் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களையும், பல்வேறு சாஸ்த்ரங்களில் மஹா பெரியவாளுக்கு இருந்த ஆழ்ந்த புலமையையும் வியப்புற்று பேசினார்.

மே 21-ந் தேதி அன்று, நம் ஸ்வாமிகள், ஸ்ரீ மஹா பெரியவாளைப் பற்றி உபன்யாஸம் நிகழ்த்தினார்கள்.

மே 22-ந் தேதி காலை - 6 மணி முதல் கணபதி ஹோமம், ஆவஹந்தி ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், ஏகாதச ருத்ரம், ருத்ர ஹோமம், சுவாசினி பூஜை, வடுக பூஜை, கன்யா பூஜை முதலியன இனிதே நடந்தன.

ஸ்ரீ "ராம மந்திரத்தில்" உள்ள ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்திக்கு, நம் ஸ்வாமிகள் திருமஞ்சனம், அலங்காரம் செய்வித்தது, மிகவும் ரம்யமாக இருந்தது. அன்று மாலை வேத பாராயணம், தமிழ் திருமறை பாராயணம், நாம ஸங்கீர்த்தனம், நாதஸ்வரம், வாண வேடிக்கைகள், யானை இவைகளுடன் ஸ்ரீ மஹா பெரியவாளின் திருவுருவப்படம் அழகாக அலங்கரிக்கப்பட்ட ஒரு ரதத்தில், கும்பகோணத்தில் உள்ள சில முக்கிய வீதிகளில் பவனி வந்தது பார்ப்பதற்கு கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது.

மேற்படி வைபவத்தை, நம்முடைய மிஷனைச் சார்ந்த கும்பகோணம் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஸ்ரீ ஸ்ரீனிவாஸ அய்யர் அவர்கள் திறம்பட ஏற்று நிர்வகித்தார். இவ்வைபவத்தில், உள்ளூர் பக்த ஜனங்களும் கலந்து கொண்டார்கள்.

மறு நாள், நம் ஸ்வாமிகள், பக்தர்களுடன் திருக்கண்ணபுரம், திருவாரூர், திருக்கண்ணமங்கை, திருச்சேரை, நாச்சியார் கோவில் முதலிய திவ்ய தேசங்களுக்குச் சென்று பெருமாளை சேவித்தார்கள்.

---

## மே 25-ந் தேதி முதல் 31-ந் தேதி வரை

*கே.கே.நகர் ஆஸ்திக ஸமாஜத்தின்* சார்பில் நம் ஸ்வாமிகளின் உபந்யாஸம் நடைபெறுவதாக இருந்தது. ஸ்வாமிகளின் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் சிரஞ்சீவி ஸ்ரீ பாலாஜி அவர்கள் *'ஸ்ரீமத் பாகவத சப்தாஹம்'* உபன்யாஸம் செய்தார்கள்.

மேற்படி உபந்யாஸத்தை, முதல் நாள் அன்று, ஸ்ரீ ஸ்வாமிகள், பாகவத மஹாத்மியத்தைப் பற்றி பேசி, துவக்கி வைத்தார்கள். தினமும் திரளான பக்தர்கள் வந்திருந்து உபன்யாஸத்தைக் கேட்டு ஆனந்தித்தனர்.

பூர்த்தி நாள் அன்று, கே.கே. நகர் ஆஸ்திக சமாஜத்தின் தலைவர் எஸ். ராஜகோபாலய்யர் அவர்களுக்கு, அவர் செய்து வரும் ஆஸ்திக தொண்டைப் பாராட்டி நமது மிஷன் சார்பில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது.

---

**ஜூன் 1-ந் தேதி முதல் 5-ந் தேதி வரை**

நம் ஸ்வாமிகள் அவர்களால் *மயிலை* அலமேலுமங்காபுரம் ரமண கேந்திரா ட்ரஸ்ட் சார்பில், பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் ***'உபதேஸ உந்தியார்''*** பாடல்களின் விளக்க சொற்பொழிவின் இரண்டாம் பகுதி நடைபெற்றது. முழுவதும் வேதாந்தபரமான இந்த சொற்பொழிவிற்கு திரளான ஜனங்கள் கூடியிருந்து சிரத்தையுடனும் அமைதியுடனும் ஶ்ரவணம் செய்தது மிகவும் சந்தோஷமாக இருந்தது.

## நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

**ஜூலை 16-ந் தேதி** - *அனுஷம்*

---

**ஜூலை 17-ந் தேதி**

*சாதுர்மாஸ்யம் விரதம்* ஆரம்பம்

---

**ஜூலை 20-ந் தேதி - வ்யாஸ பூர்ணிமா**

*'வ்யாஸ பூஜை'* ப்ரேமிக பவனத்தில் நடைபெறும்.

மங்களானி பவந்து

